மாலை முரசு

பக்கங்கள் 14+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 24 வியாழக்கிழமை 11.12.2025 | அதிர்வு 134

## வட மாகாணத்தில் 4 மாவட்டங்களில் வெள்ள அபாயம்!

“வடக்கு மகாநாத்தில் மன்னார், யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் தாழ் நிலப் பகுதியில் உள்ள மக்கள் வெள்ள அபாயம் தொடர்பில் அவதான 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# இலங்கை வந்தார் அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர்



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் அலிசன் ஹூக்கர் இன்று இலங்கை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் அவரை வரவேற்றார்.

அதையடுத்து அவர்கள் இருவரும் கட்டுநாயக்கவில் உள்ள இலங்கை விமானப் படைத் தளத்துக்குச் சென்றனர்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருட்களை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க விமானப் படையின் சி-130 விமானத்தை அவர்கள் பார்வையிட்டதுடன், அங்கு பணியில் ஈடுபட் 02▶

# நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப அநுர அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துக்குப் பாராட்டு

## ஜனாதிபதியிடம் மல்வத்து, அஸ்கிரிய தேரர்கள் நேரில் தெரிவிப்பு

**இலங்கையில் அனர்த்தத்துக்குப் பிறகு மக்களின் வாழ்க்கையையும், நாட்டையும் மீண்டும் கட்டியெழுப்ப ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டு வரும் வேலைத்திட்டம் பாராட்டுக்குரியது என்றும், அதற்காக தங்கள் ஆசிகளைத் தெரிவித்துக்கொள்வதாகவும்** 02▶



# பருத்தித்துறையில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஆசிரியை ஒருவர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், வடமராட்சி – பருத்தித்துறையில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஆசிரியை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த நிஷாந்தினி நித்திலவர்ணன் (வயது 43) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி ஆசிரியை நேற்று இரவு வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் படுகாயமடைந்தார் எனப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மலையக மக்களை வடக்கு, கிழக்கில் குடியேற்றத் தயார்!

## சுமந்திரன் பகிரங்க அறிவிப்பு



"வடக்கு, கிழக்கில் குடியேற வருமாறு மலையக உறவுகளைப் பாசத்துடன் அழைக்கின்றோம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசு பாதுகாப்பான காணி தர மறுத்தால் வடக்கு, கிழக்கில் குடியேற மலையக மக்கள் விருப்பம் என்ற மனோ கணேசன் எம்.பியின் அறிவித்தலை தனது முகநூல் பக்கத்தில் பகிர்ந்தே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"கடந்த வாரம் கண்டி, கம்பளைக்கு உங்களோடு சென்ற போது மலையகத்தில் இருந்து வடக்கு, கிழக்குக்கு வந்து குடியேறுமாறு எமது தமிழ் உறவுகளை அழைப்பதற்குத் தயாராகவே வந்தோம். ஆனால், நீங்களும் அவர்களும் அதற்கான விருப்பத்தைத் தெரிவிக்கும் வரை பகிரங்கமாக அதைச் சொல்வதைத் தவிர்த்திருந்தோம்.

இப்போது அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, மக்களும் அதை விரும்புவதாகச் சொல்கின்றார்கள் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

மிகுந்த பாசத்தோடு மனதார உங்களை வரவேற்கின்றோம். ஏற்கனவே எம்மில் பலர் தங்கள் சொந்த நிலங்களைக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளார்கள்.

அதேபோல் அரச காணிகளையும் வாழ்விடங்களுக்கும் பயிர்ச் செய்கை, தோட்டம் போன்றவற்றுக்கும் பெற்றுத்தர எம்மால் முடிந்த முயற்சிகளைச் செய்து கொடுப்போம்." – என்றும் சுமந்திரன் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## நாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பிரதிப் பதிவாளர்களான இரு தேரர்களும் தெரிவித்தனர்.

சியாமோபாலி மகா நிகாயவின் மல்வத்து மகா விகாரை தரப்பின் பிரதிப் பதிவாளர் ராஜகீய பண்டித வண, மஹவெல ரதனபால நாயக தேரர், சியாமோபாலி மகா நிகாயவின் அஸ்கிரிய மகா விகாரை தரப்பின் பிரதிப் பதிவாளர் வரலாற்று சிறப்புமிக்க பதுளு முதியங்கன ரஜமகா விகாரையின் பொறுப்பாளர் கலாநிதி வண, முருத்தெனியே ஸ்ரீ தம்மரதன நாயக தேரர் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே நிலங்க தேல ஆகியோர் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்த போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கண்டி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் மற்றும் மீள்குடியமர்த்தல் நடவடிக்கைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டன.

மக்களை மீள்குடியமர்த்தும் பணிகளில் தலதா மாளிகை வழங்கக்கூடிய பங்களிப்புகள் குறித்து இதன்போது தியவடன நிலமே ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகையால் 'Rebuilding Sri Lanka' நிதியத்துக்கு நிதி நன்கொடையும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.

---

## வட மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக இருப்பது அவசியம். குறிப்பாக, குளங்களின் கீழ்ப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிக அவதானமாக இருப்பது அவசியம்."

– இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறை தலைவரும் காலநிலை ஆய்வாளருமான பேராசிரியர் நா. பிரதீபராஜா எதிர்வு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட காலநிலை அவதானிப்பு அறிக்கையில்,

"நாட்டின் தென்கிழக்கே நிலவும் காற்றுச் சுழற்சி மற்றும் தென்மேற்கு பகுதியில் நிலவும் வளிமண்டல தளம்பல் நிலை காரணமாக தற்போது கிடைத்து வரும் மழை நாளை வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் பல மணித்தியாலங்களுக்கு மேலாக மழை கிடைத்து வருகின்றது – தொடர்ந்தும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. குளங்கள் பலவும் வான் பாய்கின்றன. ஆறுகளும் அவற்றின் கொள்ளளவை எட்டியுள்ளன. ஆகவே, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் தாழ்நில பகுதியில் உள்ள மக்கள் வெள்ள அபாயம் தொடர்பாக அவதானமாக இருப்பது அவசியம். குறிப்பாக குளங்களின் கீழ்ப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிக அவதானமாக இருப்பது அவசியம்.

குறிப்பாக, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு தொடர்ந்து சில மணி நேரங்களுக்கு கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆகவே, யாழ்ப்பாணம் நகரை அண்மித்த தாழநிலப்பகுதி மக்கள், ஏனைய தாழ் நிலப்பகுதிகளில் பகுதிகளில் உள்ள மக்களும் அவதானமாக இருப்பது சிறந்தது. வெள்ள நிலைமைகளை அவதானித்து முன்கூட்டியே பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வது சிறந்தது.

மன்னார் மாவட்டத்துக்கு நீரை கொண்டு வரும் பாலியாறு, பறங்கியாறு போன்றவற்றின் நீரேந்து பிரதேசங்களில் மழை கிடைத்து வருகின்றது. எனவே, இந்தப் பகுதிகளில் உள்ள மக்களும் அவதானமாக இருப்பது அவசியம். கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் நாளை வரை கனமழை தொடரும்.

மத்திய, தென், ஊவா, சப்ரகமுவ மாகாணங்களிலும் மழை தொடர்ந்து கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனவே, இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் வெள்ளம், நிலச்சரிவு தொடர்பாக அவதானமாக இருப்பது அவசியம்." – என்றுள்ளது.

---

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள அமெரிக்கப் படையினருடன் கலந்துரையாடினர்.

இதையடுத்து அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் அலிசன் ஹுக்கர் அரச பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டவர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.





## பேரனர்த்தத்தால் பாதிப்படைந்த

# யாழ். - வவுனியா ரயில் பாதைகளை சீரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(கி.வசந்தன்)

டித்வா புயல் மற்றும் மழை காரணமாகப் பாதிப்படைந்த ரயில் பாதைகளைச் சீரமைக்கும் நடவடிக்கைகளை வவுனியா ரயில்வே திணைக்கள உத்தியோகத்தர்களும், இராணுவத்தினரும் இணைந்து ஆரம்பித்துள்ளனர்.

வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான ரயில் பாதைகள் பல இடங்களில் வெள்ளம் காரணமாகப் பாதிப்படைந்துள்ளன.

இந்தப் பாதிப்படைந்த ரயில் பாதைகளைச் சீரமைத்து ரயில் சேவையை வழமைக்குக் கொண்டு வரும் வகையில் இந்த நடைவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக ரயில் தண்டவாளங்களைப் பழுது பார்த்தல் மற்றும் தண்டவாளங்களில் நீர் பாய்ந்த அரிக்கப்பட்ட இடங்களைச் சீர்செய்தல் போன்ற நடவடிக்கைகளை இராணுவத்தினரும், வவுனியா ரயில்வே திணைக்கள உத்தியோகத்தர்களும் இணைந்து முன்னெடுக்கின்றனர்.

















# சகல வழிபாட்டுத் தலங்களையும் துப்புரவு செய்ய அரசு நிதி உதவி

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்



இலங்கையில் பேரிடரால் பாதிக் கப்பட்ட அனைத்து வழிபாட்டுத் தலங் களுக்கும் நிதி உதவி வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள் ளது.

அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போது அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறு கையில்,

"பேரிடருக்கு உள்ளான அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் துப்பரவு செய்து, சமய நடவடிக்கைகளை இயல்பு நிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

இந்த நடவடிக்கைக்கு உதவி வழங்குதல் பொருத்தமானது என அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, வழிபாட்டுத் தலங்க ளைத் துப்புரவு செய்து இயல்பு நிலைக் குக் கொண்டு வருவதற்காக 25 ஆயி ரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.

அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்வதற்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி இதற்குரிய அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்துள்ளார்." – என்றார்.

# மன்னாரில் மாடுகளைப் பார்க்கச் சென்ற உயர்தர வகுப்பு மாணவன் சடலமாக மீட்பு!

மன்னாரில் தமக்குச் சொந்தமான மாடுகளைப் பார்க்கச் சென்ற மாணவன் சடலமாக மீட்கப்பட்டார்.

மன்னார்,கற்கிடந்தகுளம் பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் அகிலன் (வயது 18) என்ற உயர்தரம் கற்கும் மாணவனே சடலமாக மீட்கப்பட்டார்.

மேற்படி மாணவன் மாடுகளைப் பார்ப்பதற்கு நேற்றுமுன்தினம் செவ் வாய்க்கிழமை வீட்டை விட்டு வெளியே றினார். இரவாகியும் அந்த மாணவன் வீட்டுக்கு வராததைத் தொடர்ந்து மாண வனின் தந்தை கிராம மக்கள் உதவியு டன் அவரைத் தேடி வந்த நிலையில், நேற்று புதன்கிழமை மாணவன் கற் கிடந்தகுளம் கால்வாயில் சடலமாக மீட்கப்பட்டார். சடலம் பிரேத பரிசோதனை களுக்காக மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸ ார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இரணைமடுக் குளத்தின் 8 வான் கதவுகள் திறப்பு!



வன்னி மாவட்டங்களில் தொடர்ந்து பெய்யும் மழையால் கிளிநொச்சி இர ணைமடுக் குளத்தின் 8 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என் றும் அவர் கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பேரிடரால் கிளிநொச்சி மாவட்ட மக்க ளுக்கான கொடுப்பனவுகள் துரிதகதியில் வழங்கப்படுகின்றது. அத்துடன், பேரிட ரால் கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரம் கால்நடைகள் இறந்தன. இது தொடர்பிலும் பதிவுகள் நடைபெறுகின்றன.

வன்னி மாவட்டத்தில் கிடைக்கும் கனமழையால் இரணைமடுக் குளத்தின் 8 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. கிடைக்கும் மழையின் அளவைப் பொறுத்து வான் கதவுகளை மேலும் திறப்பதா அல்லது பூட்டுவதா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். தாழ்நிலப் பகுதி மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்." – என்றார்.



# கிளிநொச்சியில் சட்டவிரோத மண் அகழ்வுக்கு எதிராகப் போராடியவர் டிப்பர் மோதி உயிரிழப்பு

## திட்டமிட்ட கொலை என உறவினர்கள் சந்தேகம்

சட்டவிரோத மண் அகழ்வுக்கு எதிராகப் போராடி வந்தவர், சட்டவிரோத மண் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தால் மோதப்பட்டு, மனைவியின் கண் முன்னே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் திட்டமிட்ட கொலை என உறவினர்கள் குற்றம் சாட்டி வரும் நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவத்தில் திருவையாறு பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் சோபநாத் (வயது 35) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் ,கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வுகளுக்கு எதிராகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்த நிலையில் நேற்று புதன்கிழமை மனைவியுடன், இரணைமடுப் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை, வீதியோரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்திய வேளை பின்னால் மிக வேகமாக வந்த டிப்பர் வாகனம், மோட்டார் சைக்கிளை மோதி தள்ளியது.

அதன்போது மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருந்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மனைவி டிப்பர் வாகனத்தைக் கண்ணுற்று மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கியதால் அவர் தப்பித்துக் கொண்டார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் டிப்பர் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

# பாதிக்கப்பட்ட கால் நடை பண்ணையாளர்களை நஷ்ட ஈடுகளுக்குப் பதிவு செய்ய அறிவுறுத்து!

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட கால் நடை பண்ணையாளர்கள் உரிய பிரிவு கால் நடை வைத்தியர் அல்லது கால் நடை அபிவிருத்தி போதனாசிரியரிடம் பதிவு செய்யுமாறு மாகாண கால் நடைஉற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் வைத்தியர் எம்.ஏ.எம்.சுல்பிகார் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

2025 நவம்பர் மாதம் ஏற்பட்ட டித்வா அனர்த்த நிலையால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண கால் நடை பண்ணையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான சேத விவரங்களை உறுதிப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்யும் பணிகள் கிழக்கு மாகாண கால் நடை சுகாதார திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட அனைத்து கால் நடை பண்ணையாளர்களுக்கும் இது பொருந்தும்.

இதன்போது ஏற்பட்ட கால் நடை பண்ணை, கட்டடங்கள், ஊபகரணங்கள் போன்ற சேத விவரங்களுடன் பதிவுகளை மேற்கொள்ளவும் குறித்த விவரங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அருகில் உள்ள அரச கால் நடை வைத்திய அதிகாரி அல்லது கால் நடை அபிவிருத்தி போதனாசிரியரிடத்தில் பதிவு செய்யுமாறும் மேலதிக விபரங்களுக்கு பின்வரும் மாவட்ட பிரதி பணிப்பாளர்களை தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டம் -077 3530847 (வைத்தியர் சிபாயா நௌசாட் ,அம்பாறை -0750638538 (எம்.ஜே. நௌசாட் ஜமால்தீன்), மட்டக் களப்பு- 0773601322 (வைத்தியர் எம்.ஏ.ஹாதி).




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஆற்றுப்படுத்தலும் அவசியம்

பேரிடர் அனர்த்தங்களால் பெரும் இழப்புக்களைச் சந்தித்த நாட்டை மீண்டும் கட்டி எழுப்புவது என்பது இமாலயப் பணியாகும்.

அதற்குத் தேவையான பொருளாதார வளம், நிதிப் பலம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வது மிக நெருக்கடியாக இருக்கும் அதே சமயம், அதற்கு அப்பால் பௌதிக கட்டுமானங்களைத் தாண்டி, சமூகத்தின் மன ஓட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளின்றும் மக்களை மீட்டெடுப்பதும் மற்றொரு பெரும் பணியாக - நெருக்கடியாக - இருக்கப் போகின்றது.

பேரிடர் இழப்புகளினால் சமூகத்தின் ஆன்மாவில் ஆழப் பதிந்த உள நெருக்கடிகளில் - மன வடுக்களில் - இருந்து மக்களை, அவர்களின் உற்சாகத்தை, வாழ்வியல் ஆத்ம பலத்தை, மீட்டெடுக்கும் ஆற்றுப்படுத்தல் பணி சுலபமாக இருக்கப் போவதில்லை.

சமீபத்திய வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களிடையே மனநலப் பிரச்சினைகள் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் ஏற்கனவே கவலை தெரிவித்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் பெரும்பாலும் தூக்கக் குழப்பம், நீடித்த மன அழுத்தம் மற்றும் தற்கொலை எண்ணங்கள் உள்ளிட்ட உணர்ச்சி அதிர்ச்சியின் அறிகுறிகளைக் காட்டுகின்றன என்று மனநல மருத்துவ ஆலோசகர் டாக்டர் விந்தியா விஜயபண்டார குறிப்பிடுகின்றார்.

பேரிடரின் போது ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் நிச்சயமற்ற தன்மையின் விளைவாக பதற்றம், மனச்சோர்வு மற்றும் பிந்தைய மன உளைச்சல் சீர்கேடு போன்ற நிலைமைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றுஅவர்மேலும்எச்சரிக்கின்றார்.

பேரிடரின் போது ஏற்பட்ட மோசமான அனுபவங்கள், ஆழமான மனக் காயங்கள், அச்சத்தால் உருவான மனப் பீதி என்பன வாழ்வியலில் தொடர் விளைவுகளை அவ்வப்போது வெளிப்படுத்தும் ஆபத்தும் உண்டு. அந்த அனுபவங்களும் அவை ஏற்படுத்திய மன உளைச்சல்களும் ஆழ்மனதில் பதிந்திருந்து விட்டு திடீர்திடீரெனக் குணங்குறி விளைவுகளைக் காட்டக் கூடும்.

இத்தகைய விளைவுகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, சுகாதார அமைச்சகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு மனநலக் குழுக்களை அனுப்பி உளவியல் ஆதரவு மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறது.

பேரிடர் நிவாரணத்தின் அடுத்த கட்டம் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் மற்றும் வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பதற்கு அப்பால் செல்ல வேண்டும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர். இதுஉயிர்பிழைத்தவர்களுக்கு நீண்டகால மனநல சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அம்சமாகும்.

நீண்டகால உளவியல் சிக்கல்களைத் தடுக்க நிவாரண மையங்களுக்குள் பாதுகாப்பான பங்களிப்புக்கான வாய்ப்புகள் மற்றும் தொடர்ச்சியான ஆற்றுப்படுத்தல் பராமரிப்பு தேவை என்பதையும் சுகாதார நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

பேரிடர் அனர்த்த மீட்பில் மன ஆற்றுப்படுத்துகையும் பிரதான அங்கமாக அமைய வேண்டும்.



# அட்டாளைச்சேனை வியாபார நிலையங்கள் சுகாதார பரிசோதகர்களால் சோதனையில்!

(நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஊடாக வைத்தியதி காரி டாக்டர் ஏ. எல். அலாவுத்தீன் தலை மையில் அட்டாளைச்சேனை, பால முனை ஒலுவில் போன்ற பிரதேசங்களில் உள்ள வியாபார ஸ்தலங்கள் குறிப்பாக மரக்கறி, கோழி இறைச்சி கடை மற்றும் ஏனைய வியாபார ஸ்தலங்களை சுகா தார வைத்திய அதிகாரிகள் பரிசோதனை செய்து அதன் போது காலாவதியான பொருள்களை அவ்விடத்திலேயே அகற்றிவிட்டு எச்சரிக்கையும் செய்தனர்.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார பரிசோதர்களான கலீலூர்ரஹ்மான் , வூப் , பௌமி, ஹை தர் மற்றும் ஏனையவர்களும் கலந்து கொண்டனர்.

அத்துடன் பல தேநீர் கடைகளும் இங்கு பரிசோதனை செய்யப்பட்டன.

தேநீர்க்கடைகளில் அசுத்தமான மற்றும் காலாவதியான பொருள்களை யும் அகற்றி அதனூடாக எதிர்வரும் காலங்களில் இந்தப் பகுதி மக்களுக்கு நல்ல உணவகங்களையும் சுகாதார



அடிப்படையிலான உணவுகளையும் வழங்க வேண்டுமென சுகாதார வைத் திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அலாவுத்தீன் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் மழை காலங்களில் டெங்கு நோய் மற்றும் எலிக்காய்ச்சல் பரவுவதற்கான அறிகுறிகள் தென்படு கின்றது.

மேலும் பிரதேசத்தில் உள்ள சகல வீடுகள் மற்றும் வெளித் தோட்டத்தில் உள்ளவர்களை சுத்தம் செய்வதற்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

# பதுளையில் மேலும் 238 குடும்பங்கள் வெளியேற்றம்!

(நடராஜா மலர்வேந்தன் )

மண்சரிவு அபாயம் காரணமாக பதுளை மாவட்டத்தில் மேலும் 238 குடும்பங்களைச் சேர்ந்த 806 பேர் அவர்களது வசிப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று பதுளை மாவட்ட செயலாளர் பிரபாத் அபேவர்தன தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழையின் தாக்கம் காரணமாக தொடர்ந்து அங்கு மழை யுடனான வானிலை நிலவுவதால் தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தின் ஆலோசனையின் பேரில் இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று குறித்த நபர்களை பாதுகாப் பான இடங்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பதுளை மாவட்ட செய லாளர் பிரபாத் அபேவர்தன குறிப்பிட்டார்.

15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 14 பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்படாமல் இருந்த ரிதீமாலியத்த பிரதேச செயலாளர் பிரிவும் இப்போது பாதிக்கப்பட்டுள்ளது.

களுக்கேலே மலையில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 50 குடும்பங்க ளைச் சேர்ந்த 129 பேரை பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

சொர்ணாதோட்ட பிரிவில் 60 குடும் பங்களைச் சேர்ந்த 157 பேரும், ஊவா பரணகம பிரிவில் 40 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேரும், ரிதீமாலியத்த பிரி வில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேரும், மீகஹாகிவுல பிரிவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 158 பேரும் மண்சரிவு அபாயம் காரணமாக அவர் களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஹாலி-எல பிரதேச செயலாளர் பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 87 பேரும், எல்ல பிரதேச செயலாளர் பிரிவில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 148 பேரும் என மொத்தம் 238 குடும்பங்களைச் சேர்ந்த 806 பேர் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட வேண்டியிருந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.



# இந்திய மீனவர்களின் சட்டவிரோத இழுவைமடி பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதம்!

## வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிப்பு

இந்திய மீனவர்களின் சட்டவிரோத இழுவைமடி மீன்பிடி நடவடிக்கைகளால் வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பாதிப்புக்கள் தொடர்பாகவும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் சந்தித்துக் கலந்துரையாடுவது குறித்தும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்குக்குரிய மனு வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை சந்தித்து இந்தக் கோரிக்கைக் கடிதத்தைக் கையளித்தனர்.

பல்வேறு இடர்பாடுகளின் போதும் இந்திய அரசு இலங்கைக்கு வழங்கி வருகின்ற உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத இழுவைமடி மீன்பிடி முறையால் வடக்கு மாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கடல்வளம் என்பன எவ்வகையில் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன என்பது குறித்தும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்குத் தமக்குச் சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தினர் அந்த மனுவில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தால் கையளிக்கப்பட்ட மனுவை ஏற்றுக்கொண்ட ஆளுநர், அதனை உடனடியாகவே ஜனாதிபதியின் கவனத்துக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தால் லுனுகல பிரதேச மக்களுக்கான உதவி!






(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டம் – நாவிதன்வெளி பிரதேச செயலகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் மனிதாபிமான நிவாரண சேகரிப்பை கடந்த நான்கு நாள்களாக மேற்கொண்டது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்கிரமவின் ஆலோசனை வழிகாட்டலுக்கு அமைய பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரன் அவர்களின் தலைமையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்து இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் ஒன்று சேர்க்கப்பட்ட சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள், பாதுகாப்பாக பொதி செய்யப்பட்டு பிரதேச செயலாளர் அவர்களின் வழிகாட்டுதலோடு பதுளை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட லுனுகல பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அத்தியாவசிய மற்றும் நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்லும் அலுவலக அனர்த்த நிவாரண செயற்பாட்டு குழுவினரை மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், மேலதிக மாவட்ட செயலாளர், மற்றும் கணக்காளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் வழியனுப்பி வைத்தனர்.

இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட நிவாரணப் பொருள்கள் பதுளை மாவட்டத்தின் லுனுகல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட கல்லுல்ல, வட்டாவத்த, வெலவத்த, மடுல்சீமை மக்களுக்கு பகிர்தளிப்பதற்காக லுனுகல பிரதேச செயலாளர் எஸ். புவனேந்திரன் தலைமையிலான அனர்த்த நிவாரண முகாமைத்துவ குழுவிடம் கையளிக்கப்பட்டது.

இதேநேரம் இங்கிருந்து சென்ற அனர்த்த நிவாரண பணியாளர்கள் நேரடியாக மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயத்துக்குச் சென்று அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடியதுடன் அவர்களுக்கு தேவையான ஒரு தொகுதி நிவாரண பொருள்களையும் கையளித்தனர்.



# மயிலிட்டி - திருப்பூர் ஒன்றிய மக்களின் நிதியில் மலையக மாணவருக்கு உதவி

மயிலிட்டி – திருப்பூர் ஒன்றிய மக்களின் நிதியுதவியில், இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மலையக மாணவர்களுக்கெனத் தொகுக்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் அடங்கிய நிவாரணப் பொதிகள், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பணிப்புரைக்கு அமைவாக, கண்டி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் லலித் பண்டாரவிடம் நேற்று புதன்கிழமை கையளிக்கப்பட்டன.

மயிலிட்டி முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை மற்றும் திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றிய நிர்வாகம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில், மயிலிட்டி – திருப்பூர் ஒன்றிய மக்களின் நிதிப் பங்களிப்புடன் இந்த உதவித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கற்றல் உபகரணங்கள் அடங்கிய 200 நிவாரணப் பொதிகள், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்றுப் புதன்கிழமை மதியம் ஆளுநர் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதனையடுத்து, வடக்கு மாகாண ஆளுநர் விடுத்த உடனடிப் பணிப்புரைக்கு அமைவாக, அந்தப் பொதிகள் நேற்றைய தினமே கண்டி மாவட்டத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

கண்டி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் பொறியியல் சேவைகள் எந்திரி ந.சுதாகரன், வடக்கு மாகாண ஆளுநர் செயலக உதவிச் செயலாளர் க.ஏகாந்தன் ஆகியோரால் அந்தப் பொருள்கள் கண்டி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டன.





# முல்லைத்தீவில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தில் கடற்கரைகளை சுத்தம் செய்யும் நடவடிக்கை!



அண்மயில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிப்புற்ற கடற்கரைகளை Cleen Sri Lanka வேலைத் திட்டத்தின்கீழ் சுத்தம் செய்யும் முகமாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் வழிகாட்டுதலில் முதன் கட்டமாக முல்லைத்தீவு கடற்கரை மற்றும் கொக்கிளாய் முகத்துவார கடற்கரை என்பன இன்றய தினம் சுத்தம் செய்யப்பட்டன.

முல்லைத்தீவு கடற்கரை மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையிலும் நடைபெற்றது.

கொக்கிளாய் முகத்துவார கடற்கரை சுத்தம்செய்யும் பணியானது கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் விஜயகுமார் தலைமையிலும் நடைபெற்றது.

குறித்த சிரமதானப் பணியில் முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தியோகத்தர், கரைத்துரைப்பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர், இராணுவம், கடற்படை, பொலிஸார், கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் முதலானோரின் பங்குபற்றலில் இது நடைபெற்றது.

இதற்கான ஆதரவை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் வழங்கியிருந்தனர்.

---





# முத்துஐயன்கட்டு குள அணையில் திருத்த வேலைகளே நடக்கின்றன!

## மக்கள் அச்சப்படத் தேவையில்லை என்று அறிவிப்பு

முத்துஐயன்கட்டு அணையின் வால்கட்டு அருகில் சிறிய அளவிலான திருத்த வேலை நடைபெற்று வருகின்றது. இந்தப் பணியில் நீர்ப்பாசன திணைக்களத்தினர், பாதுகாப்புப் படைகள் மற்றும் விவசாயிகள் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

சமூக ஊடகங்களில் “முத்துஐயன்கட்டு அணையில் சேதம்” என்ற வதந்தி பரவி வருகிறது.

இது தவறான தகவல், அணையில் எந்தவித சேதமும் இல்லை. வால்கட்டு அருகே சிறிய திருத்தும் பணிகள் மட்டுமே நடைபெற்று வருகின்றது.

எனவே பொதுமக்கள் பதற்றம் அடைய வேண்டாம் என்றும் வதந்திகளை நம்ப வேண்டாம் எனவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

எந்தவொரு ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டால், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு அதிகாரபூர்வமாக உடனடியாகத் தகவல் வழங்கும் என்றும் தெரிவித்துள்ளது.





# மூடப்பட்டிருந்த தேயிலை தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு ஜீவன் நடவடிக்கை!

(மஸ்கெலியா நிருபர்)

அக்கரத்தனை பெருந்தோட்ட நிறுவனத்துக்கு உட்பட்ட டயகம அக்கரபத்தனை கிழக்கு பிரிவு தேயிலை தொழிற்சாலை கடந்த மாதம் 12ஆம் திகதி முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இதனால் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்கள் தொழிலின்றி பாரிய சிரமங்களை சந்தித்து வந்தனர்.

இந்த பிரச்சினை இ.தொ.கா. பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து தொடர்புடைய தரப்புகளுடன் அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு குழுவினரின் ஆய்வின் போது தேயிலை நிறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக முதற்கட்ட விசாரணைகளில் இரண்டு உயர் அதிகாரிகள் முறைகேடு செய்தது கண்டறியப்பட்டதை அடுத்து தொழிற்சாலை விசாரணை முடியும்வரை மூடப்பட்டுள்ளது என்று நிறுவனம் அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆரம்ப பேச்சுவார்த்தையில் தோட்ட நிறுவனத்தின் தலைமை அதிகாரி கலந்து கொள்ளாததால் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. பின்னர் ஹட்டன் உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் இ.தொ.கா. சிரேஷ்ட இயக்குநர் லோகதாஸின் கோரிக்கையின்படி இம்மாதம் தீர்க்கமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

ஹட்டன் உதவி தொழில் ஆனையாளர் தலைமையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில், தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு 3 மாத அவகாசம் கோரிய தோட்ட நிறுவனம் முன்வைத்த வேண்டுகோளை ஜீவன் தொண்டமான் திடமாக நிராகரித்தார்.

குற்றம் செய்தது அதிகாரிகள். தொழிலாளர்களின் வாழ்க்கையில் தண்டனையை திணிக்கக் கூடாது. எமது மக்களுக்கு உடனடி தொழில் வாய்ப்பு வழங்க தொழிற்சாலை விரைவில் திறக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

விசாரணை நிறைவடையும்வரை வேறு தோட்டங்களில் பணிபுரியும் இரண்டு அதிகாரிகளை மாற்றீடாக நியமித்து தொழிற்சாலையை செயல்படுத்தலாம் எனவும் பரிந்துரைத்தார்.

நீண்டகால பேச்சுவார்த்தையின் முடிவில், எதிர்வரும் ஜனவரி மாதம் 01ஆம் திகதிக்குள் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயாருள்ளதாக தோட்ட நிர்வாகம் எழுத்து மூலம் ஒப்புதல் வழங்கியது.

புரிந்துணர்வு பத்திரத்தில் தோட்ட நிர்வாகத்துடன் இணைந்து ஹட்டன் உதவி தொழில் ஆனையாளர் மற்றும் இ.தொ.கா. பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானும் கையெழுத்திட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் இ.தொ.கா. பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், அக்கரபத்தனை பெருந்தோட்ட நிறுவன தலைமை அதிகாரி அஜித் பெரேரா, தொடர்புடைய தோட்ட அதிகாரிகள், தொழில் ஆணையாளர் அதிகாரிகள் மற்றும் இ.தொ.கா. அலுவலகப் பிரதிநிதிகளும் தோட்ட மக்களும் கலந்துக்கொண்டனர்.

# வடமராட்சி கிழக்கில் போக்குவரத்து பிரச்சினைகளுக்கு வெகு விரைவில் ஒரு தீர்வைக்கொண்டு வருவோம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் தெரிவிப்பு

(பூ.லின்ரன்)

வடமராட்சி கிழக்கு பகுதியில் ஏற்படும் போக்குவரத்து பிரச்சினைகளுக்கு வெகுவிரைவில் ஒரு தீர்வைக் கொண்டு வருவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குழு தலைவருமான ரஜீவன் ஊடகங்களுக்கு கருத்து வழங்கையில் தெரிவித்தார்

மேலும் அவர் கூறுகையில்,

யாழ்ப்பாணத்தில் மிகவும் கஷ்டமான மற்றப் பல பிரச்சினைகளையும் அபிவிருத்தியில் பின்தங்கிய பிரதேசமாக வடமராட்சி கிழக்கு காணப்படுகின்றது இந்தப் பிரதேசத்தில் பல அபிவிருத்திகளை செய்யவேண்டிய கடமையில் நாம் உள்ளோம்.





முக்கியமாக அண்மைக் காலமாக வடமராட்சி கிழக்கில் அரச மற்றும் தனியார் பஸ்கள் தமது பணியை ஒழுங்காக செய்வதில்லை. மற்றும் பரீட்சை காலங்களில் பஸ்கள் இடையில் பழுதடைந்து நிற்கும் செயற்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன.

இதற்கான தீர்வை வெகுதொலைவில் நாம் எடுப்போம். அதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. மற்றும் இந்தப் பிரதேசத்தில் அதிகளவான தொழில் முனைவோர்களைக் கொண்டு வந்து இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியை ஊக்குவிக்க வேண்டும்.– என்றார்.

# நேருவும், இந்திராவும்தான் வாக்குகளை திருடினார்கள்

## மக்களவையில் அமித் ஷா குற்றச்சாட்டு



நேருவும் இந்திராவும்தான் வாக்குகளை திருடினார்கள் என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றஞ்சாட்டி உள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையில் தேர்தல் சீர்திருத்தம், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணி (எஸ்.ஐ.ஆர்) தொடர்பான விவாதம் 2 ஆவது நாளாக நேற்றும் நடைபெற்றது. இதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உரையாற்றுகையில்,

“தேர்தல் ஆணையம் எஸ்.ஐ.ஆர். பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கு தேர்தல் ஆணையம்தான் பொறுப்பு, மத்திய அரசு அல்ல. எனவே, இதுகுறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தத் தேவையில்லை. அதேநேரம், தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக விரிவான விவாதம் நடத்த வேண்டும் என்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கையை ஏற்று விவாதம் நடத்த அரசு சம்மதித்தது.

எஸ்.ஐ.ஆர். பணி நடைபெறுவது முதல் முறை அல்ல. முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சியின் போதும் இப்பணி நடைபெற்றது. தேர்தலை நேர்மையாக நடத்துவதற்காகத் தான் இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது. சில வாக்காளரின் பெயர் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளன. மேலும் உயிரிழந்த லட்சக்கணக்கானவர்களின் பெயர்களும் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

இதனால் முறைகேடு நடக்க வாய்ப்பு உள்ளது. இதைத் தடுக்கவே இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து பொய்யான தகவலை பரப்பி வருகின்றன. இந்த விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே தவறாக வழிநடத்துகின்றன.

தேர்தலில் நீங்கள் (காங்கிரஸ்) வெற்றி பெற்றால் வாக்காளர் பட்டியல் தூய்மையாக உள்ளது. ஆனால் தோல்வி அடைந்தால் வாக்காளர் பட்டியலை குறை கூறுவீர்கள். இந்த இரட்டை வேடம் வேண்டாம். தேர்தல் தோல்விக்கு உங்கள் தலைமைத்துவம் தான் காரணம். மின்னணு வாக்கு இயந்திரமோ வாக்காளர் பட்டியலோ காரணம் அல்ல. “ என்று தெரிவித்துள்ளார்.

# ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்தார் விஜய்யின் முன்னாள் மேலாளர் பி.டி.செல்வகுமார்



த.வெ.க. தலைவர் விஜய்யின் முன்னாள் மேலாளர் பி.டி.செல்வகுமார் தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்துள்ளார்.

அண்மையில், விஜய்யின் த.வெ.கவில் அ.தி.மு.கவில் முக்கிய முகமாக இருந்த செங்கோட்டையன் இணைந்தார். அவரைத் தொடர்ந்து தி.மு.க, ம.தி.மு.க, அ.தி.மு.க. என பல கட்சிகளில் வலம் வந்த நாஞ்சில் சம்பத் இணைந்தார். இதனால் த.வெ.கவுக்கு பலம் கூடியதாக பேசப்பட்ட நிலையில் விஜய்யின் முன்னாள் மேலாளர் தி.மு.கவில் இணைந்துள்ளார்.

தி.மு.கவில் இணைந்துள்ள பி.டி. செல்வகுமார், விஜய் நடித்த ‘புலி’ படத்தின் தயாரிப்பாளர் எனத் தெரிகிறது. தவிர இவர், ’கோயமுத்தூர் மாப்பிள்ளை’ படத்தில் விஜய்யுடன் நடித்தும் உள்ளார். மேலும், விஜய்யின் ‘சுறா’, ‘வில்லு’ ‘போக்கிரி’ ஆகிய படங்களுக்கு பி.ஆர்.ஓவாக பணியாற்றி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் தி.மு.கவில் இணைந்தது குறித்து அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழக முதல்வர், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள தி.மு.க. தலைமையகத்தில், இன்று காலை கன்னியாகுமரி மாவட்டத்தில் பல அரசு பள்ளிக் கூடங்களுக்கு வகுப்பறைகள் மற்றும் கலை அரங்கங்களை தன் சொந்த செலவில் கட்டிக் கொடுத்த மக்கள் சேவகரும் – ‘தென் மாவட்டங்களில் சிறந்த கல்வி நன்கொடையாளர்’ விருது பெற்றவருமான ‘கலப்பை மக்கள் இயக்கம்’ நிறுவனத் தலைவர் பி.டி.செல்வகுமார் தலைமையில் 50 இற்கும் மேற்பட்ட நிர்வாகிகள் தி.மு.கவில் இணைந்தனர்.

அதுபோது தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் எசெயலாளர் ரெ.மகேஷ், ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தேசிய உணர்வுக்கு பாரதியார் அளித்த நீடித்த பங்களிப்பை பாராட்டினார் மோடி



மகாகவி சுப்பிரமணிய பாரதியின் பிறந்தநாளை முன்னிட்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.

அதேநேரம், இந்தியாவின் கலாசார, இலக்கிய மற்றும் தேசிய உணர்வுக்கு அவர் அளித்த நீடித்த பங்களிப்புகளையும் பாராட்டினார்.

இது குறித்து எக்ஸில் பதிவிட்ட அவர், பாரதியார் தைரியத்தைத் தூண்டிய ஒரு நபர் என்றும், அவரது எண்ணங்கள் தலைமுறை தலைமுறையாக இந்தியர்கள் மீது நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் விவரித்தார்.

இலக்கியச் சின்னமாகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும் கவிஞரின் இரட்டை மரபை எடுத்துரைத்த பிரதமர், பாரதி இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது மட்டுமல்லாமல், நீதியான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை நோக்கிய முயற்சிகளுக்கும் ஊக்கமளித்தார் என்றார்.




# வெனிசுலாவின் எண்ணெய் கொள்கலனை கைப்பற்றியதாக அமெரிக்கா அறிவிப்பு

வெனிசுலா கடற்கரைக்கு அருகே பெரிய எண்ணெய் கப்பல் ஒன்றை கைப்பற்றி அந்நாட்டின் நிக்கோலஸ் மதுரோவின் அரசாங்கத்திற்கு அமெரிக்கா நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவிற்குள் அதிக அளவு போதைப்பொருள் வெனிசுலாவில் இருந்து கடத்தப்படுவதாக கூறி வெனிசுலாவின் நிக்கோலஸ் மதுரோ அரசாங்கத்திற்கு எதிராக ட்ரம்ப் அரசாங்கம் தொடர் குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருகிறது.

அதே சமயம் சீனாவின் முதன்மை எண்ணெய் ஏற்றுமதியாளராகவும், உலகின் மிகப்பெரிய எண்ணெய் இருப்புகளை கொண்ட நாடாகவும் கருதப்படும் வெனிசுலாவின் வளங்களை அமெரிக்கா திருடப் பார்ப்பதாக வெனிசுலா தொடர்ந்து குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருகிறது.

இந்நிலையில் வெனிசுலா கடற்கரைக்கு அருகே பெரிய எண்ணெய் கப்பல் ஒன்றை சிறைப்பிடித்து இருப்பதை அமெரிக்கா உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப்,

நாங்கள் வெனிசுலா கடற்கரையில் ஒரு எண்ணெய் கப்பலை கைப்பற்றியுள்ளோம், இதுவரை கைப்பற்றப்பட்டதிலேயே மிகப்பெரிய கப்பல் என தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து, அமெரிக்காவின் அட்டர்னி ஜெனரல் எண்ணெய்க் கப்பல் சிறைப்பிடிக்கப்பட்டது தொடர்பான காணொலி காட்சி ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் சிறைப்பிடிக்கப்பட்ட கப்பல், வெனிசுலா மற்றும் ஈரானில் இருந்து ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்ட எண்ணெய்களை கொண்ட சென்ற கச்சா எண்ணெய் கப்பல் என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை தொடர்ந்து வெனிசுலா உடனடியாக கண்டனங்களை தெரிவித்துள்ளது.

மேலும் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவின் அரசாங்கம், அமெரிக்காவின் இந்த செயலை சர்வதேச கடற்கொள்ளை என்று குற்றம்சாட்டியுள்ளது.

வெனிசுலா அந்நிய தலையீட்டை தொடர்ந்து எதிர்க்கும் என்றும், அமெரிக்கா ஒருநாளும் எண்ணெய் காலனியாக மாறாது என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

# 'ட்ரம்ப் தங்க அட்டை' குடிவரவு நடைமுறையை அறிமுகப்படுத்தினார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்



'ட்ரம்ப் தங்க அட்டை' என்ற புதிய குடிவரவு நடைமுறையை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிமுகப்படுத்தியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதிய குடிவரவு தொடர்பான டிரம்ப் தங்க அட்டை (Trump Gold Card) திட்டத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த திட்டம் செல்வந்தர்களுக்கு அமெரிக்காவில் நிரந்தர வதிவிடத்தையும், குடியுரிமையையும் எளிமையான முறையில் வழங்கும் நோக்கம் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் அமெரிக்காவின் குடியுரிமையை பெற விரும்பும் நபர்கள், குறைந்தபட்சம் 1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அமெரிக்காவில் முதலீடு செய்ய தயாராக இருக்க வேண்டும்.

ட்ரம்ப் தங்க அட்டை திட்டம் தொடர்பாக நேற்று புதன்கிழமை சமூக ஊடக பக்கத்தில் வெளியிட்ட தகவலில், தகுதியுடைய மற்றும் ஆய்வு செய்யப்பட்ட நபர்களுக்கு நேரடி குடியுரிமை பாதையை இது ஏற்படுத்தி தருவதாகவும், அமெரிக்காவின் சிறந்த நிறுவனங்கள் இந்த திட்டத்தின் மூலம் தங்கள் திறமைகளை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிப்ரவரியில் இந்த திட்டம் தொடர்பான அறிவிப்பு வெளியான போதே பல்வேறு விமர்சனங்களை இது பெற்று வருகிறது.

பல்வேறு தரப்பினருக்கு குடிவரவு கடினமாக்கப்படும் நிலையில், செல்வந்தவர்களுக்கு மட்டும் இது மிக சுலபமான மற்றும் சாதகமான இரு – அடுக்கு குடிவரவு அமைப்பை உருவாக்குகிறது என அமெரிக்காவில் உள்ள பல்வேறு ஜனநாயக சக்திகள் மற்றும் விமர்சகர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

பக்கங்கள் - 03

கனடா முரசு

வியாழக்கிழமை 11/12/2025

2025ஆம் ஆண்டில் கனடாவில் இருந்து அதிகளவு இந்தியர்கள் வெளியேற்றம்



C2



# பயங்கரவாத பட்டியலில் மேலும் 04 அமைப்புகள்

பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் 4 புதிய அமைப்புகளை சேர்த்துள்ளதாகக் கனடா அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் கனேடியர்கள் மற்றும் சமூகத்தினரை அச்சுறுத்தல், வெறுப்பு மற்றும் வன்முறை பயங்கரவாதச் செயல்களிலிருந்து பாதுகாக்க உதவும் என கனடா அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி அந்தக் குழுக்களைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பதாக அறிவித்துள்ளார்.

அந்தப் பட்டியலில், 764, மனியாக் மேர்டர் கல்ட், டெர்கிராம் கூட்டு, ஈராக் மற்றும் சிரிய இஸ்லாமிய அரசின் அல்லது இணை அமைப்பான இஸ்லாமிய அரசு-மொசாம்பிக் ஆகிய C2

# கனடாவில் ப்ளூ முதலான தொற்றுக்கள் பரவுகின்றன



கனடாவில் ப்ளூ முதலான தொற்றுக்கள் பரவிவரும் நிலையில், தொற்று பரவாமலிருக்கும் வகையில் மக்கள் முன்னெச்சரிக்கைநடவடிக்கைகளைபின் பற்றுமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

கனேடிய மாகாணங்கள் சிலவற்றில் ப்ளூ, respiratory syncytial virus (RSV) முதலான வைரஸ் தொற்றுகள் பரவிவருகின்றன.

குறிப்பாக, ஆல்பர்ட்டா, ஒன்ராறியோ, கியூபெக் மற்றும் நியூ ப்ரன்ஸ்விக் ஆகிய மாகாணங்களில் ப்ளூ காய்ச்சல் அதிகரித்துவருகிறது.

ஆல்பர்ட்டாவில் மட்டும், நவம்பர் மாதம் 29ஆம் திகதி நிலவரப்படி 519 பேர் ப்ளூ காய்ச்சலுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களில் 31 பேர் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. கூடுதல் சோகம் என்னவென்றால், 15 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

ப்ளூ காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால, அவர்களை சமாளிக்க மருத்துவமனைகள் திணறிவருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், தடுப்பூசி பெறாதவர்கள் தடுப்பூசி பெற்றுக்கொள்ளுமாறும், காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மற்றவர்களுக்கு தொற்று பரவாமல் பார்த்துக்கொள்ளுமாறும் மருத்துவர்கள் அறிவுறுத்திவருகிறார்கள்.

# கனடாவுடனான வர்த்தகப் பேச்சுக் குறித்து நேர்மறையான கருத்தை வெளியிட்டார் ட்ரம்ப்




கனடா வங்கி 2025 ஆம் ஆண்டின் இறுதி நிதிக் கொள்கை முடிவில் வட்டி விகிதத்தை மாற்றாமல், 2.25 வீதமாக தக்க வைத்துள்ளது.

“தற்போதைய கொள்கை வட்டி வீதம் பணவீக்கத்தை 2 வீதம் அருகில் வைத்திருக்கவும், பொருளாதாரம் ‘கட்டமைப்பு மாற்றம்’ எனும் காலகட்டத்தைக் கடக்க உதவவும் சரியான அளவில் உள்ளது.” என வங்கியின் ஆளுநர் டிஃப் மேக்லெம் தெரிவித்துள்ளார்.

“நடுநிலை வட்டி வீச்சின் கீழ் முனையில் கொள்கை விகிதத்தை வைத்திருப்பது பொருளாதாரத்துக்கு லேசான ஆதரவை அளிக்கும் அதே நேரத்தில் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும்” என்று அவர் தெரிவித்தார்.

தனியார் துறை பொருளாதார வல்லுநர்கள் இம்முடிவை முன்கூட்டியே எதிர்பார்த்திருந்தனர்.

2026 ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களுக்கும் விகிதம் மாறாது என அவர்கள் கருதுகின்றனர்.

கனடா வங்கியின் ஒக்டோபர் நிதிக் கொள்கை அறிக்கையின்படி, அமெரிக்காவின் புதிய கட்டணங்கள் மற்றும் வர்த்தக மோதல்கள் காரணமாக 2026 இறுதிக்குள் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் 1.5 வீதம் அல்லது 40 பில்லியன் டொலர் அளவுக்கு குறைவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2026 மற்றும் 2027 இல் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 1.4 வீதமாக இருக்கும் என வங்கி தெரிவித்துள்ளது.

புதிய அதிர்ச்சிகள் அல்லது தரவுகள் எதிர்பார்த்ததை விட வேறுபட்டால், நாங்கள் உடனடியாக பதிலளிப்போம் என மேக்லெம் உறுதியளித்தார்.

அமெரிக்க கட்டணங்கள் இருந்த போதிலும், நுகர்வோர் செலவினம், வணிக முதலீடு, உற்பத்தித்திறன் வளர்ச்சி ஆகியவை எதிர்பார்த்ததை விட சிறப்பாக உள்ளதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார்.



# 2025ஆம் ஆண்டில் கனடாவில் இருந்து அதிகளவு இந்தியர்கள் வெளியேற்றம்

கனடா எல்லை பாதுகாப்பு சேவை (CBSA) வெளியிட்ட புதிய தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் அதிக அளவில் இந்தியர்கள் வெளியயேற்றப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 41 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஜனவரி முதல் அக்டோபர் வரை 2,831 இந்தியர்கள் கனடாவில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். 2024 ஆம் ஆண்டில் இதே காலகட்டத்தில் 1,997 பேர் மட்டுமே வெளியேற்றப்பட்டிருந்தனர்.

2019 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை வெறும் 625 ஆக இருந்தது. தற்போது, வெளியேற்றப்படும் நடைமுறையில் உள்ளவர்களில் இந்தியர்கள் 6,515 பேர் என அதிகமாக உள்ளனர்.

மொத்தத்தில், 2025-ஆம் ஆண்டில் 18,969 பேர் கனடாவில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இதில் மெக்சிகோ குடிமக்கள் 3,972 பேர் என மிகப்பெரிய பகுதியைக் கொண்டுள்ளனர்.

கனடா எல்லை பாதுகாப்பு சேவை தரவுகளின்படி, அதிகபட்ச வெளியேற்றப்பட்டவர்கள் அகதிகள் தொடர்பான விதிமுறைகளை மீறியவர்களே (15,605 பேர்). மேலும், 841 பேர் தேசிய பாதுகாப்பு, குற்றச்செயல்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற ‘கடுமையான தகுதி இழப்புகள்’ காரணமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கனடா அரசு, 2025 ஏப்ரல் மாதம் முதல் வெளியேற்றப்பட்டவர்கள் மீண்டும் நாட்டில் நுழைய விரும்பினால் செலுத்த வேண்டிய கட்டணத்தை பெரிதும் உயர்த்தியுள்ளது.

முன்பு சுமார் 1,500 கனடிய டொலராக இருந்த கட்டணம், தற்போது 12,800 டொலர் மற்றும் 3,800 டொலர் என உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், கனடா எல்லை பாதுகாப்பு சேவை உலகம் முழுவதும் உள்ள தன் அதிகாரிகள் மூலம் 5,889 பயணிகளை விமானத்தில் ஏற்ற அனுமதிக்காமல் தடுத்துள்ளது. சிலர் போலியான ஆவணங்களுடன் கனடாவுக்கு வர முயன்றதாக கூறப்படுகிறது.

இந்த தரவுகள், கனடா அரசு குடிவரவு விதிமுறைகளை கடுமையாக அமுல்படுத்தி வருவதை வெளிப்படுத்துகின்றன.

**பயங்கரவாத...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்களை சேர்த்துள்ளது.

கனடாவின் குற்றவியல் சட்டத்தின் கீழ், இந்த அமைப்புகள் இப்போது சட்டப்படி ‘பயங்கரவாதக் குழுக்கள்’ என வரையறுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்தக் குழுக்களுக்குச் சொந்தமான கனடாவில் உள்ள அனைத்துச் சொத்துக்களும் முடக்கப்பட வேண்டும், மேலும் அவை கனடாவின் பாதுகாப்புப் புலனாய்வுச் சேவைக்கு அறிவிக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டியலிடப்பட்ட பயங்கரவாதக் குழுவுக்குச் சொந்தமான சொத்துக்களுடன் தெரிந்து கொண்டே கனடாவில் அல்லது வெளிநாட்டில் உள்ள எவரும் பரிவர்த்தனை செய்வது குற்றமாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் குழுக்களுக்குப் பயனளிக்கும் வகையில் சொத்துக்கள் அல்லது நிதிச் சேவைகளை வழங்குவதும் தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கல்கரியில் தென்கிழக்கு பகுதியில் சந்தேகத்திற்கு இடமான மரணம்

கனடாவின் கால்கேரி நகரின் தென்கிழக்கு பகுதியில் நடந்த சந்தேகத்துக்கிடமான மரணம் தொடர்பாக கால்கேரி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் உள்ள ஒரு பள்ளி தற்காலிகமாக மூடப்பட்டது.

அவன்யு மற்றும் ஸ்ட்ரீட் சந்திப்பில் ஒரு ஆண் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதைத் தொடர்ந்து, அந்த பகுதி முழுவதும் பொலிஸார் முற்றுகையிட்டனர்.

சம்பவ இடத்துக்கு அருகில் அமைந்துள்ள பள்ளிக்கூடமொன்று விசாரணை காரணமாக மூடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஒரு கைவிடப்பட்ட வாகனம் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒருவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் மேலும் இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான தகவல்கள் இருந்தால் அது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

